## (ஆ) வெளிநாட்டு வர்த்தகம்

### பொதுப்படையான போக்கு

1957ம் ஆண்டு முதல் 1960ம் ஆண்டு வரை தொடர்ச்சியாக உயர்ந்துகொண்டு வந்த ஏற்றுமதிகளின் பெறுமானம், 1961ம் ஆண்டு ரூபா 17330 இலட்சத்திற்குச் சுருங்கியது. இத்தொகை முந்தைய ஆண்டுக்குரிய தொகையிலும் பார்க்க ரூபா 990 இலட்சம் குறைவானது ஆகும். இறக்குமதிகளின் பெறுமானமும் 1954ம் ஆண்டு முதற் தொடர்ச்சியாக உயர்ந்து சென்று, 1959ம் ஆண்டில் என்றுமில்லாத உயர்ந்த மட்டமான ரூபா 20050 இலட்சத்தை அடைந்தது. அதன்பின் 1960ம் ஆண்டில் அது ரூபா 19600 இலட்சமாகச் சிறிதளவாற் குறைந்து, பின் 1961ம் ஆண்டு குறிப்பிடும்படியாக வீழ்ச்சியுற்று ரூபா 17030 இலட்சமாக விளங்கியது. இத்தொகை முந்தைய ஆண்டிற்குரிய தொகையிலும் பார்க்க ரூபா 2570 இலட்சம் குறைவானதாகும். இறக்குமதிகளின் பெறுமானத்தில் ஏற்பட்ட தீட்சணமான வீழ்ச்சியின் பயனல் 1957ம் ஆண்டு முதல் நான்கு வருடங்களாகப் பாதகமாக விளங்கிய வர்த்தக நிலுவை, 1961ம் ஆண்டிற் சிறிது சாதகமாக ரூபா 300 இலட்சம் மிகையைக் காட்டியது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது ஏற்றுமதிகளின் பெறுமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு ஏற்றுமதி விலைகளின் தீட்சணமான வீழ்ச்சியே முழுக் காரணியாகும். ஏற்றுமதி விலைக்குறிகாட்டி 1960ம் ஆண்டிற்குரிய 104 புள்ளிகளிலிருந்து, 1961ம் ஆண்டில் 95 புள்ளிகளுக்கு வீழ்ச்சியுற்றது. 1960ம் ஆண்டு 103 புள்ளிகளாக இருந்த ஏற்றுமதி அளவுக் குறிகாட்டி ஓரளவு அதிகரித்து 1961ம் ஆண்டில் 107 புள்ளிகளாக விளங்கியது.

அட்டவணை II—15

ஏற்றுமதிகளின் அமைப்பு

| பண்டம் | பெறுமானம் பத்து இலட்சம் ரூபாய்களில் | | | மொத்த இறக்குமதிகளின் சதவீதமாக | | |
|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1959 | 1960 | 1961 |
| தேயிலை .. .. | 1046 | 1096 | 1115 | 59·6 | 59·8 | 64·3 |
| இரப்பர் .. .. | 298 | 378 | 260 | 17·0 | 20·7 | 15·0 |
| 3 பிரதான தெங்குப் பொருட்கள் .. | 244 | 184 | 202 | 13·9 | 10·0 | 11·7 |
| ஏனைய உள்நாட்டு ஏற்றுமதிகள் .. | 104 | 117 | 104 | 6·0 | 6·4 | 6·0 |
| மொத்த உள்நாட்டு ஏற்றுமதிகள் .. | **1692** | **1775** | **1681** | **96·5** | **96·9** | **97·0** |
| திருப்பி ஏற்றப்பட்டவை .. | 62 | 57 | 52 | 3·5 | 3·1 | 3·0 |
| **மொத்தம்** .. .. | **1754** | **1832** | **1733** | **100·0** | **100·0** | **100·0** |

மூலம்: இலங்கைச் சுங்கப் புள்ளிவிபரங்கள்

கடந்த சில ஆண்டுகளாக தேயிலை ஏற்றுமதிகளின் அளவு கிட்டத்தட்டத் தொடர்ச்சியாக அதிகரித்துக்கொண்டே சென்றது. அவ்வதிகரிப்பையொத்த வகையில் விலைவாசிகள் ஓரளவு சிறிதனவான விகிதாச்சாரமாகவே குறைந்தன. உதாரணமாக 1957ம் ஆண்டு முதல் 1960ம் ஆண்டுவரை தேயிலை ஏற்றுமதிகளின் அளவு வருடாந்தம் ஏறக்குறைய 4 சதவீதத்தால் அதிகரித்துள்ளதெனினும், அதேகாலத்தில் தேயிலையின் விலை வருடாவருடம் ஏறக்குறைய சராசரி ஒருசத விகிதாச்சாரமாக வீழ்ச்சியடைந்துள்ளது. முந்தைய ஆண்டைப் போலவே, 1961ம் ஆண்டிலும் ஏற்றுமதிகளின் அதிகரிப்பு, விலை வீழ்ச்சியின் பயனை ஈடுசெய்யப் போதியஅளவு பெரிதாக விளங்கியது. எனவே தேயிலை ஏற்றுமதியாற் கிடைத்த வருமானம் 1960ம் ஆண்டுக்குரிய ரூபா 10960 இலட்சத்திலிருந்து 1961ம் ஆண்டு 11150 இலட்சத்திற்கு அதிகரித்தது.

இரப்பரின் ஏற்றுமதி வருமானம் ரூபா 3780 இலட்சத்திலிருந்து ரூபா 2600 இலட்சத்திற்கு தீட்சணமாகக் குறைந்தது. இரப்பர் ஏற்றுமதி அளவிலும் 16 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டது. முந்தைய ஆண்டில் இரப்பரின் விலை தீட்சணமாக வீழ்ச்சி

யுற்று அவ்வாண்டின் தொடக்கத்தில் இருந்த உச்ச விலையிலும் பார்க்க அவ்வாண்டின் இறுதியில் 23 சதத்தாற் குறைந்ததாக விளங்கியது. இரப்பர் விலைவாசியின் சீர்கேடு 1961ம் ஆண்டிலும் குறைந்த அளவிற் தொடர்ந்தது. எனவே ஆண்டுமுழுவதற்குமான இரப்பர் ஏற்றுமதி விலைக்குறிகாட்டி 105 புள்ளிகள் என்பது 1960ம் ஆண்டுக்குரிய 130 புள்ளிகளுடன் ஒப்பிடத்தக்கது. 1959ம் ஆண்டு ரூபா 2440 இலட்சமாக விளங்கிய மூன்று பிரதான தெங்குப் பொருட்களினதும் ஏற்றுமதிப் பெறுமானம் 1960ம் ஆண்டில் ரூபா 2020 இலட்சத்திற்கு அதிகரித்தது. தெங்குப் பொருட்களின் ஏற்றுமதிப் பெறுமானம் அதிகரித்தமைக்கு மூலகாரணம் அவற்றின் ஏற்றுமதி அளவில் ஏற்பட்ட ஒப்பியல்பில்லாத அதிகரிப்பேயாகும். ஏற்றுமதி அளவுக் குறிகாட்டியின் துணைகொண்டு நோக்கின், இது 1960ம் ஆண்டுக்குரிய 109 புள்ளிகளிலிருந்து 1961ம் ஆண்டில் 154 புள்ளிகளுக்கு (அதாவது 41 சதவீதத்தால்) உயர்ந்தது. இதற்குமாருக, தெங்குப் பொருட்களின் விலை மட்டத்தில் மீழ்ச்சி எதுவும் ஏற்படவில்லை. உண்மையில், அவை முந்தைய ஆண்டின் இறுதிப் பகுதியில் ஏற்கனவே அடைந்திருந்த கீழ்மட்ட விலைகளிலிருந்து மேலும் குறைந்துகொண்டே சென்றன. 1961ம் ஆண்டு தை மாதத்தில் 84 புள்ளிகளாக இருந்த ஏற்றுமதி விலைக்குறிகாட்டி, ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து சென்று, கார்த்திகை மாதத்தில் ஆகக் குறைந்ததாகிய 75 புள்ளிகளை அடைந்தது. ஆண்டு முழுவதற்குமாக உள்ள தெங்குப் பொருட்களின் ஏற்றுமதிவிலைக் குறிகாட்டி 80 புள்ளிகளாக இருந்தமை, முந்தைய ஆண்டிற்குரிய 103 புள்ளிகளுடன் ஒப்பிடத்தக்கது. முற்கூறியவாறு, முக்கியமாக இரப்பர், தெங்குப் பொருட்கள் ஆகியவற்றின் விலைகளின் வீழ்ச்சியும், தேயிலையின் சிறிதளவான விலைவீழ்ச்சியும் ஒன்று சேர்ந்து, ஏற்றுமதிவிலைக் குறிகாட்டி 1960ம் ஆண்டில் இருந்த 104 புள்ளிகளிலிருந்து 1961ம் ஆண்டு 95 புள்ளிகளுக்கு வீழ்ச்சியடைவதற்குக் காரணமாய் இருந்தன.

இறக்குமதிகளின் பெறுமானம் 1960ம் ஆண்டிற்குரிய ரூபா 19600 இலட்சத்திலிருந்து 1961ம் ஆண்டு ரூபா 17030 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 1961ம் ஆண்டு ஏற்றுமதியாற் கிடைத்த வருமானம் குன்றிய பொழுதும்கூட வர்த்தக நிலுவையில் சிறிது சாதகமான ரூபா 300 இலட்சம் மிகை காணப்பட்டது. இப்பலன் பெரும்பாலும் 1961ம் ஆண்டு தை மாதம் புகுத்தப்பட்ட அதிதீவிரமான இறக்குமதிக் கட்டுப்பாடுகளால் ஏற்பட்டதாகும். இறக்குமதிகளின் பெறுமானம் கடந்த சில ஆண்டுகளாக ஓரளவிற் தட்டுத்தடையின்றி உயர்ந்துகொண்டே வந்து, 1959ம் ஆண்டு என்றுமில்லாத உயர்ந்த மட்டமான ரூபா 20050 இலட்சத்தை அடைந்தது. பின் 1960ம் ஆண்டில் அது ரூபா 19600 இலட்சத்திற்கு வீழ்ச்சியுற்றது. இறக்குமதிகளின் அளவுக்குறிகாட்டி 1960ம் ஆண்டுக்குரிய 113 புள்ளிகளிலிருந்து மிகவும் ஒடுங்கி 1961 ஆண்டில் 91 புள்ளிகளாக விளங்கியது. இறக்குமதிகளின் அளவில் ஏற்பட்ட சுருக்கம் நுகர்ச்சிப் பொருட்கள், முதலீட்டப் பொருட்கள், நடுத்தரமான பொருட்கள் ஆகிய ஒவ்வொரு இறக்குமதித் தொகுதிகளிலும் ஏற்பட்டது. ஆனுல் மிகத் தீட்சணமான வீழ்ச்சி ''ஏனைய நுகர்ச்சிப் பொருட்கள்'' என்ற தொகுதியிற்தான் காணப்பட்டது. 1961ம் ஆண்டு இத்தொகுதியின் இறக்குமதி அளவு 1960ம் ஆண்டிற்குரிய அளவின் மூன்றில் ஒரு பங்கிலும் பார்க்கச் சிறிது குறைந்ததாக விளங்கியது. 1961ம் ஆண்டு ஏற்றுமதி விலைவாசிகள் ஓரளவிற் குறைந்துசென்றிருக்கையில் அவற்றை ஈடுசெய்யக்கூடிய முறையில் இறக்குமதி விலைகள் மாற்றமடையவில்லை. சகல இறக்குமதிகளினதும் விலைக்குறிகாட்டி 1960ம் ஆண்டிற்குரிய 102 புள்ளிகளிலிருந்து 1961ம் ஆண்டில் 101 புள்ளிகளுக்கு சிறிய அளவாற் குறைந்து விளங்கியது. எனவே 1960ம் ஆண்டு 102 புள்ளிகளாக விளங்கிய வர்த்தகமாற்று விகிதம் 1961ம் ஆண்டில் 94 புள்ளிகளாகச் சீர்கேடடைந்தது.

ஏற்றுமதிகள்

பெறுமானம், அளவு, விலை ஆகியவை பற்றிய புள்ளிவிபரங்கள், பின் இணைப்பு IIல் உள்ள 27ல் இருந்து 31 வரை அட்டவணைகளிற் தரப்பட்டுள்ளன.

தேயிலை:— இலங்கையின் தேயிலை உற்பத்தி அடுக்கடுக்கான மூன்ருவது வருடம் மறுபடியும் அதிகரித்தது. முந்தைய ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட 4350 இலட்சம் இருத்தல்களுக்கு எதிராக 1961ம் ஆண்டில் 4550 இலட்சம் இருத்தல்கள் உற்பத்தி செய்யப்பட்டன. ஏற்றுமதி செய்யப்புட்ட தேயிலையின் அளவும் அதி

கரித்தது. உலகத் தேயிலை உற்பத்தி சம்பந்தமான தற்காலிக விபரங்களின்படி, 1961ம் ஆண்டில் உலகத் தேயிலை உற்பத்தியின் அளவு முன் என்றுமில்லாத முறையில் (8 சத வீதத்தால்) அதிகரித்தது, எனத் தெரிகிறது. (1) இவ்வுற்பத்தி அதிகரிப்பின் பலாபலன் அதிதீட்சணமாக அவ்வாண்டின் பிற்பகுதியிலேயே புலனாகியது. அவ்வாண்டின் முன் அரைப்பகுதியில் கொழும்பு ஏலத்திற் சகல தேயிலைகளுக்குமான விலை முந்தைய வருடத்தில் இருந்ததிலும் பார்க்க ஓரளவு உயர்ந்ததாக விளங்கியது. எனினும் மூன்றும் காற்பகுதிக்குரிய விலைகள் அதனினும் ஒரு வருடத்திற்கு முந்தைய காலத்திற்குரிய விலைகளிலும் பார்க்க ஓரளவு குறைந்ததாக இருந்தன. ஆண்டின் இறுதிப்பகுதியில், குறிப்பாக நாலாம் காற்பகுதியில், கொழும்பு ஏல விலைகள் முந்தைய ஆண்டின் நாலாம் காற்பகுதியில் உள்ள விலைகளிலும் பார்க்க பெரும் அளவிற் குறைவானவையாக விளங்கின. இவ்விலைவீழ்ச்சிக்கு, தேயிலையின் திறமையில் வழக்கமாக அக்கால போகத்தில் ஏற்படும் சீர்த்திருத்தம் இம்முறை ஏற்படத்தவறிவிட்டமையே ஓரளவிற் காரணமாயிருந்தது. இன்னொரு வகையில், மேற்கூறிய காரணத்திலும் கூடியஅளவில் அமையத்தக்கதாக, உலகத்தின் தேயிலை நிரம்பலில் அக்காலத்தில் ஏற்பட்ட பெரிய அதிகரிப்பின் பயனாய் விலைகள் வீழ்ச்சியடைந்தன எனவும் கூறலாம். திறமைக்குப் பெரும்பாலும் இலக்கான உயர்ந்த பிரதேசத் தேயிலைகளின் விலை, 1960ம் ஆண்டின் நாலாம் காற்பகுதியில் ஒரு இறுத்தலுக்கு உள்ள ரூபா 2.15ல் இருந்து 1961ம் ஆண்டின் நாலாம் காற்பகுதியில் ஒரு இறுத்தலுக்கு ரூபா 1.94 ஆக வீழ்ச்சியடைந்தது. ஏனையவகைத் தேயிலைகளினது விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி மேலும் கடுமையானதாகும். 1960ம் ஆண்டின் நாலாம் காற்பகுதியிற் சராசரி விலையாக ஒரு இராத்தலுக்கு ரூ 1.87 பெற்ற மத்திய பிரதேசத் தேயிலைகளும் தாழ்ந்த பிரதேசத் தேயிலைகளும் 1961ம் ஆண்டின் நாலாம் காற்பகுதியிற் பெற்ற விலை, ஆக ரூபா 1.52 ஆகும். எனினும் 1961ம் ஆண்டின் முன் அரைப்பகுதியில் உயர்ந்த விலைகள் நிலவியதின் பயனாக 1961ம் ஆண்டு முழுவதற்குமான சராசரி விலை, ஒரு நடுத்தரமான முறையில் மட்டும் குறைவுற்றது. 1960ம் ஆண்டு கொழும்பு ஏலத்திற் சகலவகைத் தேயிலைகளுக்குமான சராசரி விலை ஒரு இறுத்தலுக்கு ரூபா 1.88 ஆகவும், 1961ம் ஆண்டில் அது ரூபா 1.83 ஆகவும் விளங்கியது. பிரித்தானிய நாட்டிலும் சகலவகைத் தேயிலைகளினதும் விலைப்போக்கு கொழும்பு ஏலத்தின் விலைப்போக்கைப் போலவே சென்றது. அதாவது 1961ம் ஆண்டின் முன் அரைப்பகுதியின்போது, இலண்டனிற் சகலவகைத் தேயிலைகளுக்குமான விலை, முந்தைய ஆண்டின் முன் அரைப்பகுதியில் இருந்த விலையிலும் பார்க்க உயர்ந்ததாக விளங்கியது. இலண்டனில் ஏற்பட்ட விலை வீழ்ச்சிகள், கொழும்பில் நிகழ்ந்த தன்மையைப் போலவே, 1961ம் ஆண்டின் பின் அரைப்பகுதியில் ஏற்பட்டதாகும்.

அட்டவணை II—16

தேயிலை—உற்பத்தியும், ஏற்றுமதிகளும், விலைகளும்

| வருடம் | உற்பத்தி | ஏற்றுமதிகள் | | கொழும்பு ஏலச் சராசரி விலைகள் இறுத்தலுக்கு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | அளவு பத்து இலட்சம் இறுத்தல் | அளவு பத்து இலட்சம் இறுத்தல் | ஏற்றுமதி விலை இறுத்தலுக்கு ரூ. ச. | உயர்ந்த பிரதேச ரூ. ச. | மத்திய பிரதேச ரூ. ச. | தாழ்ந்த பிரதேச ரூ. ச. | சகல தேயிலைகளும் ரூ. ச. |
| 1955 .. .. | 380 | 362 | 3·30 | 2·34 | 2·04 | 2·40 | 2·24 |
| 1956 .. .. | 376 | 348 | 3·00 | 2·50 | 1·96 | 1·88 | 2·16 |
| 1957 .. .. | 398 | 368 | 2·78 | 2·05 | 1·61 | 1·88 | 1·86 |
| 1958 .. .. | 413 | 411 | 2·75 | 2·11 | 1·51 | 1·48 | 1·73 |
| 1959 .. .. | 413 | 384 | 2·72 | 2·13 | 1·69 | 1·67 | 1·85 |
| 1960 .. .. | 435 | 410 | 2·67 | 2·03 | 1·75 | 1·83 | 1·88 |
| 1961 .. .. | 455 | 426 | 2·62 | 1·99 | 1·72 | 1·74 | 1·83 |

மூலங்கள்: இலங்கைச் சுங்கப்புள்ளி விபரங்கள்,
கொழும்புத் தேயிலை தரகர் சங்கம்,
தேயிலைக் கட்டுப்பாட்டு அதிகாரியின் நிர்வாக அறிக்கைகள்.

(1) மூலம்: சர்வதேச தேயிலைக் குழுவின் மாதாந்த புள்ளிவிபரச் சுருக்கம்.

இரப்பர்:— 1961ம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட இரப்பரின் அளவு 2150 இலட்சம் இருத்தல்களாகும். இது முந்தைய ஆண்டிற்குரிய தொகையிலும் பார்க்கச் சிறிது குறைவானதாகும். ஏற்றுமதி செய்யப்பட்ட இரப்பரின் அளவிலும் வீழ்ச்சி ஏற்பட்டது. இவ்வருடத்திற் பருவமற்ற மழை தொடர்ந்து பெய்தமையால் இரப்பறப்பால் வடித்தத் தொழில் தடைப்பட்டு, அதன் பயனாக 1961ம் ஆண்டின் இரப்பர் உற்பத்தி பாதிக்கப்பட்டது. முந்தைய ஆண்டின்போது தொடர்ச்சியாகக் குறைந்துகொண்டே சென்ற இரப்பரின் விலை 1961ம் ஆண்டின் போதும் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தது.

உலகத்தின் சகல நாடுகளிலும் உட்கொள்ளப்பட்ட இயற்கை இரப்பரின் அளவு 1952ம் ஆண்டு முதற் தொடர்ச்சியாக அதிகரித்துக்கொண்டு வந்ததெனினும், அது 1961ம் ஆண்டிற் சிறிது தடைப்பட்டது என்பதற்கான ஆதாரங்கள் உள. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1961ம் ஆண்டில் இயற்கை இரப்பரின் பாவிப்பு சிறிது வீழ்ச்சியடைந்துவிட்டதென்றும்கூட அவ்வாண்டுக்குரிய அரைகுறையான புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இரப்பர் பாவிக்கும் பிரதான நாடுகளான ஐக்கிய அமெரிக்கா, பிரிட்டன், சீனு ஆகிய தேசங்களில் 1961ம் ஆண்டின் அநேகமான மாதங்களில் (பெரும்பாலும் அவ்வாண்டின் முக்காற்பகுதியில்) உட்கொள்ளப்பட்ட இயற்கை இரப்பரின் அளவு முந்தைய ஆண்டின் ஒப்பியல்பான காலத்தில் உட்கொள்ளப்பட்ட அளவிலும் பார்க்கக் குறைவானதாக இருந்தது. மேற்கூறிய நாடுகளிலும், ஏனைய பிரதானமான மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் இயற்கை இரப்பரின் பாவிப்பில் ஏற்பட்ட குறையை, முற்றிலும் ஈடுசெய்யக்கூடிய அளவிற்கு கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் பேரில் அறிவிக்கப்பட்ட கொள்வனவுகளின் அதிகரிப்பு இருக்கவில்லை. இரப்பரின் விலைவாசிகள் தொடர்ச்சியாகக் கீழ்நிலையில் இருந்தமையால் ஒரு இருத்தலுக்கு 30 சதமாக விளங்கிய ஏற்றுமதித்தீர்வை, மாசி மாதத்தில் ஒரு இருத்தலுக்கு 20 சதமாகக் குறைக்கப்பட்டது. ஆண்டின் இறுதிப் பகுதியில் இரப்பரின் மேல் சாய்வுப் பிரமாண ஏற்றுமதித் தீர்வை முறை ஒன்றை அமைப்பதற்கு அரசாங்கம் ஊக்கம் எடுத்து, 1961ம் ஆண்டு கார்த்திகை மாதம் 26ம் திகதி அதைப் புகுத்தியது. இவ்வித அமைப்பின்படி, இலண்டனில் முதலாம் ரக ஆர். எஸ். எஸ். இரப்பருக்கு முந்தைய வாரத்தில் நிலவிய விலையை, அதே ரகத்தின் கொழும்பின் ஏற்றுமதி விலைக்குச் சமமான முறையில் மாற்றி அமைத்துக் கணித்து, அதன் அடிப்படையில் ஏற்றுமதித் தீர்வை வாரம் தோறும் நிர்ணயிக்கப்படுகிறது. உதாரணமாக, கொழும்பின் மதிப்பீட்டு விலை ஒரு இருத்தலுக்கு 94 சதமாக இருக்கும் பொழுது, குறைந்த பட்சத் தீர்வையாகிய ஒரு சதம் இறுக்கப்படல் வேண்டும். அதன்பின் தீர்வைகள் படிப்படியாக உயர்ந்த செல்லும். உயர்ந்த மட்ட விலைகள் நிலவும் பொழுது உயர்ந்த விகிதாச்சாரமான தீர்வைகள் இருக்கப்படும். உதாரணமாக, விலை ஒரு இருத்தலுக்கு ரூபா 1.23 ஆக இருக்கும் பொழுது தீர்வை 14 சதமாகவும், விலை ரூபா 1.68 ஆக இருக்கும் பொழுது தீர்வை 41 சதமாகவும் அமையும். மிக உச்சமான தீர்வையாகிய ரூபா 1.05, இரப்பரின் விலை ரூபா 2.44 ஆக இருக்கும் பொழுது இறுக்கப்படல் வேண்டும்.

**அட்டவணை II—17**

இரப்பர்—உற்பத்தியும், ஏற்றுமதிகளும், விலைகளும்

| வருடம் | உற்பத்தி பத்து இலட்சம் இருத்தல் | ஏற்றுமதி பத்து இலட்சம் இருத்தல் | ஏற்றுமதி விலை இருத்தலுக்கு ரூ. ச. | கொழும்புச் சந்தை விலை ஆர். எஸ். எஸ். 1ம் ரகம் இருத்தலுக்கு ரூ. ச. |
|---|---|---|---|---|
| 1955 .. .. .. | 210 | 222 | 1·58 | 1·28 |
| 1956 .. .. .. | 214 | 193 | 1·52 | 1·45 |
| 1957 .. .. .. | 220 | 209 | 1·44 | 1·16 |
| 1958 .. .. .. | 224 | 207 | 1·25 | 0·93 |
| 1959 .. .. .. | 205 | 206 | 1·45 | 1·25 |
| 1960 .. .. .. | 218 | 235 | 1·61 | 1·24 |
| 1961 .. .. .. | 215 | 197 | 1·32 | 1·01 |

மூலங்கள்: இரப்பர்க் கட்டுப்பாட்டதிகாரியின் நிர்வாக அறிக்கை;
இலங்கைச் சுங்கப்புள்ளி விபரங்கள்;
கொழும்பு இரப்பற் தரகர் சங்கம்.

தெங்குப் பொருட்கள்:– 1960ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் கொழுப்புக்களினதும், தேங்காயெண்ணெய் முதலாகப் பலவகை எண்ணெய்களினதும் நிரம்பல் அதிகரித்த முறையில், உலகச் சந்தைகளில் இருந்தமையால் இலங்கைத் தேங்காய் எண்ணெயின் விலை மிக விரைவாகக் குறைந்தது. எனவே முந்தைய வருடத்தின் ஆண்டு அறிக்கையிற் கூறப்பட்டபடி, மூன்று பிரதான தெங்குப் பொருட்களினதும் ஏற்றுமதி விலைக் குறிகாட்டி 1960ம் ஆண்டின் முற்பகுதியில் இருந்ததிலும் பார்க்க, கடைக்காற்பகுதியில் 28 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. 1961ம் ஆண்டின் முற்பகுதியிலுள்ள சில மாதங்களில் இவ்விலைவாசிகள் சிறிது சீர்திருத்தம் அடைந்தன எனினும், அச்சீர்த்திருத்தம் நிலைநிற்காமல், அவ்வாண்டின் எஞ்சிய மாதங்களில் மேலும் வீழ்ச்சியடைந்தன. கார்த்திகை மாதமளவிற் பிரதான தெங்குப் பொருட்களின் ஏற்றுமதி விலைக் குறிகாட்டி 1955ம் ஆண்டின்பின் எக்காலத்திலும் அடையாத கீழ் மட்டத்தை அடைந்தது. ஆண்டு முழுவதற்குமான விலை வீழ்ச்சி 22 சதவீதமாகும். உலக விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியைத் தொடர்ந்து ஏற்றுமதித் தீர்வைகளும் 1961ம் ஆண்டு வைகாசி மாதம் குறைக்கப்பட்டன. புதியதீர்வைகளாவன, தேங்காயெண்ணெய் ஒரு தொன்னுக்கு ரூபா 140, கொப்பரா ஒரு தொன்னுக்கு ரூபா 185, தேங்காய்த்துருவல் ஒரு தொன்னுக்கு ரூபா 100 முதலியனவாகும். தெங்குப்பொருட்களின் ஏராளமான உற்பத்தியின் பயனாகத் தேங்காய் பிண்ணாக்கில் ஒரு தற்காலிகமான மிகை ஏற்பட்டது. ஆனல் பிண்ணாக்கின் பேரில் ஒரு தொன்னுக்கு ரூபா 200 படி இறுக்கப்படவேண்டிய ஏற்றுமதித் தீர்வை, பிண்ணாக்கின் ஏற்றுமதியைத் தடைசெய்யத்தக்கதாக இருந்தது. எனவே பிண்ணாக்கு ஏற்றுமதியைச் சாத்தியமாக்கும் நோக்கத்துடன் அதன் ஏற்றுமதித் தீர்வை ஒரு தொன்னுக்கு 25 ரூபாகளாகக் காரத்திகை மாதம் குறைக்கப்பட்டது.

அட்டவணை II—18

பிரதான தெங்குப் பொருட்களின் ஏற்றுமதி அளவுகளும் விலைகளும்

| வருடம் | கொப்பரா | | தேங்காயெண்ணெய் | | தேங்காய்த் துருவல் | |
|---|---|---|---|---|---|---|
| | அளவு ஆயிரம் அந்தர் | ஏற்றுமதிவிலை அந்தருக்கு ரூ. ச. | அளவு ஆயிரம் அந்தர் | ஏற்றுமதிவிலை அந்தருக்கு ரூ. ச | அளவு ஆயிரம் அந்தர் | ஏற்றுமதிவிலை அந்தருக்கு ரூ. ச. |
| 1955 .. .. | 1,367 | 41·90 | 1,945 | 58·26 | 1,157 | 47·36 |
| 1956 .. .. | 1,155 | 42·43 | 1,698 | 58·42 | 1,275 | 50·86 |
| 1957 .. .. | 695 | 47·95 | 1,081 | 62·80 | 978 | 56·08 |
| 1958 .. .. | 554 | 52·97 | 887 | 69·80 | 1,135 | 63·72 |
| 1959 .. .. | 852 | 60·52 | 1,389 | 84·41 | 1,050 | 71·45 |
| 1960 .. .. | 583 | 55·23 | 1,110 | 71·83 | 1,099 | 65·23 |
| 1961 .. .. | 1,100 | 43·47 | 1,837 | 58·16 | 967 | 49·23 |

மூலம்: இலங்கைச் சுங்கப் புள்ளிவிபரங்கள்

சகல தெங்குப் பொருட்களினதும் உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் ஏற்பட்ட ஒப்பியல்பில்லாத அதிகரிப்பைப் பற்றிய குறிப்புரைகள் முன் உள்ள பந்திகளிற் தரப்பட்டன. 1961ம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட கொப்பரா முந்தைய ஆண்டிற்குரிய தொகையிலும் பார்க்க 89 சதவீதம் உயர்ந்ததாக விளங்கியதுடன், தேங்காயெண்ணெயின் ஏற்றுமதி 65 சதவீதத்தால் அதிகரித்தது. ஆனல் இதற்கு நேர்மாறாக தேங்காய்த் துருவலின் ஏற்றுமதி வீழ்ச்சியடைந்தது. 1961ம் ஆண்டில் அது அடைந்த ஏற்றுமதி மட்டம், 1951ம் ஆண்டுக்குப்பின் எக்காலத்திலும் ஏற்படாத ஆகக் குறைந்த மட்டமாகும்.

இறக்குமதிகள்

இறக்குமதிகளின் அமைப்புப் பற்றிய விபரங்களைப் பின்வரும் அட்டவணையிற் காண்க.

அட்டவணை II—19

பிரதான தொகுதிகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட சில பொருட்களின் இறக்குமதிகள்

| | பெறுமானம் பத்து இலட்சம் ரூபாய்களில் | | | சதவீதமாக | | |
|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1959 | 1960 | 1961 |
| **1. நுகர்ச்சிப் பொருட்கள்** | | | | | | |
| (அ) உணவும் குடிவகைகள்: | | | | | | |
| (i) அரிசி .. .. | 283 | 242 | 217 | 14·1 | 12·3 | 12·7 |
| (ii) கோதுமைமா .. .. | 106 | 65 | 70 | 5·3 | 3·3 | 4·1 |
| (iii) சீனி .. .. | 75 | 79 | 78 | 3·7 | 4·0 | 4·6 |
| (iv) பாலும் பாற்பொருட்களும் .. | 76 | 70 | 65 | 3·8 | 3·6 | 3·8 |
| (v) இறைச்சி, மீன், முட்டை .. | 94 | 111 | 72 | 4·7 | 5·7 | 4·2 |
| (vi) கடலை, பருப்பு கறிச்சரக்குகள் .. | 92 | 102 | 104 | 4·6 | 5·2 | 6·1 |
| (ஆ) ஆடைகள் .. .. | 148 | 152 | 135 | 7·4 | 7·8 | 7·9 |
| (இ) ஏனைய நுகர்ச்சிப் பொருட்கள்: | | | | | | |
| (i) மோட்டார் கார்கள் .. .. | 50 | 53 | 8 | 2·5 | 2·7 | 0·5 |
| (.i) கடிகாரங்கள் .. .. | 16 | 29 | — | 0·8 | 1·5 | — |
| (iii) வானொலிப் பெட்டிகள் .. | 10 | 12 | 3 | 0·5 | 0·6 | 0·2 |
| **2. நடுத்தரமான பொருட்கள்:** | | | | | | |
| (i) உரம் .. .. | 61 | 58 | 57 | 3·0 | 2·9 | 3·3 |
| (ii) நிலஎரி எண்ணெய்ப் பொருட்கள் | 132 | 118 | 126 | 6·6 | 6·0 | 7·4 |
| **3. முதலீட்டப் பொருட்கள்:** | | | | | | |
| (i) கட்டட ஆக்கப் பொருட்கள் .. | 72 | 80 | 71 | 3·6 | 4·1 | 4·2 |
| (ii) போக்குவரத்துச் சாதனங்கள் .. | 36 | 25 | 23 | 1·7 | 1·3 | 1·4 |
| (iii) இயந்திரங்களும் உபகரணங்களும் | 30 | 25 | 21 | 1·5 | 1·3 | 1·2 |
| **4. மேலுள்ள விடயங்களின் மொத்தம்** .. | 1280 | 1221 | 1050 | 63·8 | 62·3 | 61·7 |
| **5. ஏனைய இறக்குமதிகள்** .. .. | 725 | 739 | 653 | 36·2 | 37.7 | 38·3 |
| **6. சகல இறக்குமதிகள்** .. .. | 2005 | 1960 | 1703 | 100·0 | 100·0 | 100·0 |

மூலம்: இலங்கைச் சுங்கப் புள்ளிவிபரங்கள்

1959ம் ஆண்டு இறக்குமதிகளின் அளவில் ஏற்பட்ட குறிப்பிடும்படியான அதி கரிப்பு, 1960ம் ஆண்டில் தடுக்கப்பட்டது. 1961ம் ஆண்டில் அவை தீட்சணமாக வீழ்ச்சியடைந்து முந்தைய வருடத்தின் அளவிலும் பார்க்க 19 சகவீதம் குறைந்தன வாக விளங்கின. இறக்குமதிகளின் அளவில் இவ்வகைப் பெருமளவான வீழ்ச்சி, அண்மையிலுள்ள கடந்த அண்டுகளில் என்றும் ஏற்படவில்லை. அன்றியும் அவை 1961ம் ஆண்டில் அடைந்திருந்த மட்டம், 1955ம் ஆண்டிற்குப் பின் உள்ள காலத்தில் ஏற்பட்ட ஆகக் குறைந்த மட்டமாகும். இலங்கை மகாவங்கியின் வர்த்தகக் குறி காட்டிகளில் உள்ள சகலவகையான இறக்குமதித் தொகுதிகளிலும் இறக்குமதி அளவுகள் ஒடுங்கின. நுகர்ச்சிப் பொருட்கள் 25 சதவீதத்தாலும், நடுத்தரமான பொருட்கள் 2 சதவீதத்தாலும், மூதலீட்டப் பொருட்கள் 13 சதவீதத்தாலும் குறைந்தன.

நுகர்ச்சிப் பொருட்களின் தொகுதியில், ''உணவும் குடிவகையும்'' ஏன்ற உப தொகுதி 8 சதவீதத்தாற் குறைந்தது. இவ்வீழ்ச்சி பிரதான உணவுப் பொருட்க ளின் இறக்குமதி அளவுகளில் உண்டான குறைப்பினுல் ஏற்பட்டதாகும். உதாரண மாக 1961ம் ஆண்டு இறக்குமதி செய்யப்பட்ட 461,600 தொன்கள் கொண்ட அரிசி கடந்த ஐந்து ஆண்டுகளில் எவ்வருடத்திலும் இறக்குமதி செய்யப்பட்ட அளவுகளி லும் பார்க்க மிகக் குறைந்ததாகும். மீன் பண்டங்கள் பருப்புவகைகள் முதலியவற் றின் இறக்குமதிகளிலும் தீட்சணமான வீற்ச்சி ஏற்பட்டது.

உப உணவுப் பொருட்களின்* பெறுமானம் 1960ம் ஆண்டிற்குரிய 2760 இலட் சம் ரூபாய்களிலிருந்து 1961ம் ஆண்டு 2320 இலட்சம் ரூபாய்களுக்குக் குறைந்தது. ஆடைவகைகளின் இறக்குமதி அளவிலும் 13 சதவீதவீழ்ச்சி ஏற்பட்டது. எனினும்,

* இதில், பால், பால் உணவுகள், வெண்ணெய் கடைந்த பால், வெண்ணெய், மோல்ரெட் பால், மாலைத் தீவு மாசிக்கருவாடு, நெத்தலிக்கருவாடு, உப்பில் இடப்பட்டக் கருவாடு, இறால் கருவாடு, பருப்பு, பாசிப்பயறு, கடலைகள், வெங்காயம், மிளகாய் முதலியன அடங்கும்.

இலங்கை மகாவங்கியின் வர்த்தகக் குறிகாட்டியில் ஆறில் ஒருபங்கிலும் சிறிது குறைவான பெறுமான முக்கியத்துவம் வகிக்கும் ''ஏனைய நுகர்ச்சிப் பொருட்கள்'' என்ற தொகுதிப் பொருட்களின் அளவிற்தான் அதிதீட்சணமான வீழ்ச்சியேற்பட்டது. இத்தொகுதிப் பொருட்களின் அளவுக்குறிகாட்டி 1960ம் ஆண்டில் 149 புள்ளிகளாக இருந்து (1958=100) 1961ம் ஆண்டில் 49 புள்ளிகளாக விளங்கியது. இது 67 சத வீத வீழ்ச்சியாகும்.

கடந்த ஆண்டின் அறிக்கையில், ஏனைய நுகர்ச்சிப் பொருட்கள் என்ற தொகுதியைச் சேர்ந்த பொருட்களின் இறக்குமதிகள் பெருந்தொகையாக வந்துகொண்டிருந்தன என்றும், அவ்வாண்டில் அவற்றின் இறக்குமதி அளவு 1959ம் ஆண்டிற்குரிய அளவிலும் பார்க்க 48 சதவீதம் உயர்ந்ததான மட்டத்தை அடையும்வரை அதிகரித்துச் சென்றது என்றும் குறிப்பிடப்பட்டது. 1960ம் ஆண்டு ஆவணியில் பெரும்பாலும் இத்தொகுதியைச் சேர்ந்த பொருட்களின்மேல் தீர்வைகளும், இறக்குமதிக் கட்டுப்பாடுகளும், கொடுகடன் கட்டுப்பாடுகளும் கொண்டுவரப்பட்ட பின் இத்தொகுதியைச் சேர்ந்த பொருட்களின் இறக்குமதிகளில் வீழ்ச்சியடையும் அறிகுறிகள் காணப்பட்டன. இவ்வாறு 1960ம் ஆண்டின் இறுதிக் காற்பகுதியில் இவைகளின் இறக்குமதி அளவு முன் உள்ள மூன்று காற்பகுதிகளிலும் இருந்த சராசரி அளவிலும் பார்க்க 42 சதவீதத்தாற் குறைந்து விளங்கியது. 1960ம் ஆண்டு ஆவணியிற் கொண்டுவரப்பட்ட கட்டுப்பாடுகளுடன் 1961ம் ஆண்டு தை முதற் பகுதியிலும் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டன. இக்கட்டுப்பாடுகளின் இணைந்த விளைவால் இத்தொகுதிப் பொருட்களின் இறக்குமதிகளிற் கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டது.

இதுகாறும் அளவு பெறுமானம் முதலிய கட்டுப்பாடுகள் எதுவும் இன்றி இறக்குமதி செய்யக்கூடியனவாக இருந்த பலதரப்பட்ட இறக்குமதிகள் 1961ம் ஆண்டு தைமாதம்முதல் தனித்தனி உத்தரவுச் சீட்டு முறையில் கீழ்க்கொண்டுவரப்பட்டன. அதாவது, அவைகளின் மேல் பெறுமானவாரியான கட்டுவரைகள் விதிக்கப்பட்டன. மற்றும் சிலவகை இறக்குமதிகள் முற்றாகத் தடைசெய்யப்பட்டன.

இவ்வகை இறக்குமதிப் பொருட்களின் இறக்குமதிப் பெறுமானத்தைப் பொருளாதார முறையில் தொகுத்துப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

### அட்டவணை II–20

### 1961ம் ஆண்டு தை மாதம் முதல் இறக்குமதிக் கட்டுப்பாடுகளுக்குட்பட்ட பொருட்களின் இறக்குமதிப் பெறுமானம்—பொருளாதாரத் தொகுதிகளின்படி

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1960 | 1961 | பெறுமான வீழ்ச்சி |
|---|---|---|---|
| உணவும் குடிவகையும் .. .. .. .. .. .. | 35·0 | 8·5 | — 26·5 |
| ஆடைவகைகள்* .. .. .. .. .. .. | 209·5 | 187·6 | — 21·9 |
| ஏனைய பொருட்கள் .. .. .. .. .. | 156·1 | 64·8 | — 91·3 |
| அதில் மோட்டார் கார்கள் .. .. .. | 53·1 | 8·0 | — 45·1 |
| கடிகாரங்கள்** .. .. .. .. .. | 28·6 | 0·1 | — 28·5 |
| **மொத்தம்** .. .. .. .. .. .. | **400·6** | **260·9** | **— 139·5** |

மூலம்: இலங்கைச் சுங்கப் புள்ளிவிபரங்கள்

* இறக்குமதிக் கட்டுப்பாடு, ஒரு யாரின் விலை இரண்டு ரூபாவுக்கு மேலானதாகவுள்ள ஆடைவகைகளின் பேரில் உள்ளது. அவைகள் இலங்கைச் சுங்கப் புள்ளி விபரங்களில் வேறாக வகுத்துக் காட்டப்படுவதில்லை. எனவே இறக்குமதி செய்யப்பட்ட ஆடை வகைகளின் மொத்தப் பெறுமானமும் இந்த அட்டவணையிற் தரப்பட்டுள்ளது. இங்கு இவ்விடயம் தழுவும் பகுதி முன்பு உள்ள அட்டவணை II—19ல் உள்ள விடயம் தழுவும் பகுதியிலும் பார்க்கப் பரந்ததாகும். அங்கு, குறிகாட்டிகளைக் கணிப்பதற்கு உபயோகிக்கப்பட்ட விடயங்கள் மட்டும் சேர்க்கப்பட்டுள்ளன.

** கடிகாரங்களின் இறக்குமதி, தனித்தனி இறக்குமதி உத்தரவுச் சீட்டு முறையின் கீழ் 1960ம் ஆண்டு ஆவணி மாதம் 12ம் திகதி கொண்டுவரப்பட்டது.

நடுத்தரமான பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி ஓரளவிற் குறைவானதாகும். இத்தொகுதியைச் சேர்ந்த மூலப்பொருட்களான புகையிலை, மரச்சக்கை, பத்திரிகைப் பிரசுரத்திற்கான காகிதம், நிலக்கரி, பருத்திநூல் முறுக்கு முதலிய இறக்குமதிகளிற் சிறு வீழ்ச்சிகள் ஏற்பட்டன. முதலீட்டப் பொருட்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் முதலியனவற்றின் பேரில் ஒடுக்கம் ஏற்பட்டது. முன்னர் உள்ள பந்திகளிற் கூறியபடி, 1960ம் ஆண்டு ரூபா 19600 இலட்சமாக இருந்த இறக்குமதிகளின் பெறுமானம், 1961ம் ஆண்டில் 17030 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இறக்குமதிகளின் பெறுமானத்தில் ஏற்பட்ட இவ்வளவு தொகையான வீழ்ச்சி இரண்டாவது உலக யுத்தத்தின் பின்னர் எக்காலத்திலும் ஏற்படவில்லை. இறக்குமதிப் பெறுமானத்தில் இவ்வளவு குறிப்பிடத்தக்க சுருக்கம் ஏற்பட்டதெனினும் மொத்த இறக்குமதிப் பெறுமானத்தில் நுகர்ச்சிக்கான உணவுப் பொருட்களின் பங்கு, II—19ம் அட்டவணையில் முன்னர் காட்டியவண்ணம், இன்னமும் உயர்ந்த விகிதாச்சாரமானதாகவே இருந்து வருகிறது. அதாவது, இவ்வட்டவணையில் உள்ள ஆறு பிரதான உணவுப் பொருட்களினதும் பெறுமானத்தின் பங்கு, 1959ம் ஆண்டில் 36.2 சதவீதமாகவும், 1960ம் ஆண்டில் 34.1 சதவீதமாகவும், 1961 ஆண்டில் 35.5 சதவீதமாகவும் விளங்கியது. உண்மையில் அரிசியினதும், ஏனைய உணவுப் பொருட்களினதும் இறக்குமதிகள் முந்தைய வருடங்களைப்போல் வழக்கமான மட்டத்தில் இறக்குமதி செய்யப்பட்டிருப்பின், மொத்த இறக்குமதிப் பெறுமானத்தில் அவற்றின் பங்கு இன்னும் எவ்வளவோ உயர்ந்ததாக விளங்கியிருக்கும். இந்த நுகர்ச்சிப் பொருட்களின் இறக்குமதியுடன், ஆடை வகைகளின் இறக்குமதியும், மொத்த இறக்குமதிப் பெறுமானத்தில் ஓர் உயர்ந்த விகிதாச்சாரமான பங்கைப் பெற்றிருந்தது. ஆடைவகைகளின் இறக்குமதி 1960ம் ஆண்டிற்குரிய ரூபா 1520 இலட்சத்திலிருந்து 1961ம் ஆண்டு ரூபா 1350 இலட்சத்திற்கு ஓரளவு குறைவுற்றதெனினும், சகல இறக்குமதிகளின் மொத்தப் பெறுமானத்தில் அதன் பங்கு 7.9 சதவீதமாக விளங்கிற்று. இது 1960ம் ஆண்டிற்குரிய 7.8 சதவீதத்துடனும், 1959ம் ஆண்டுக்குரிய 7.4 சதவீதத்துடனும் ஒப்பிடத்தக்கதாகும்.

நடுத்தரமான பொருட்கள் சிலவற்றின் இறக்குமதி அளவு, திருப்திகரமான மட்டத்திற் தொடர்ந்தும் இறக்குமதி செய்யப்பட்டது. இறக்குமதி செய்யப்பட்ட உரங்களின் தொகை ஓரளவு அதிகரித்தது. அதன் பெறுமானம், மொத்த இறக்குமதிச் செலவில் 3.3 சதவீதமாக விளங்கியது (1960ம் ஆண்டில் 2.9 சதவீதம்). முதலீட்டப் பொருட்கள் சிலவற்றின் பெறுமானங்களும் அதிகரித்தன. இவ்வகையில் 1961ம் ஆண்டு இறக்குமதி செய்யப்பட்ட இரும்பு–எஃகு, இயந்திரங்கள் ஆகிவற்றின் இறக்குமதிப் பெறுமானமாகிய 1880 இலட்சம் ரூபாய்களும் முந்தைய ஆண்டிற்குரிய 1800 இலட்சம் ரூபாய்களிலும் பார்க்கக் கூடியது ஆகும். எனவே சகல இறக்குமதிகளின் மொத்தப் பெறுமானத்தில் இவற்றின் பங்கு 1960ம் ஆண்டில் உள்ள 9.2 சதவீதத்திலிருந்து 1961ம் ஆண்டு 11.0 சதவீதத்திற்கு உயர்ந்தது.

1961ம் ஆண்டில் இறக்குமதிகளின் அமைப்பு குறிப்பிடும்படியான மாற்றமடைந்தது. ஆனால், இது பலதரப்பட்ட நுகர்ச்சிப் பொருட்களின்மேற் கொண்டுவரப்பட்ட தீவிரமான இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் பயனால் ஏற்பட்டதாகும். கடந்த வருடங்களில் உள்ளது போலவே இறக்குமதிச் செலவீட்டில் மிகப்பெரிய இரண்டு விடயங்களாக உணவும், ஆடை வகைகளும் விளங்கின.

வர்த்தக அமைப்பு

பின் இணைப்பு IIல் உள்ள 31ம் அட்டவணை பிரதான பிரதேசங்களின்படியும் நாணயப் பிரதேசங்களின்படியும் உள்ள வர்த்தக அமைப்பைக் காட்டுகின்றது.

முந்தைய வருடங்களில் உள்ளதுபோலவே, 1961ம் ஆண்டிலும் ஸ்டேர்லிங் பிரதேசம் இலங்கையின் முக்கிய வர்த்தக பிரதேசமாக விளங்கி, ஏனைய சகல நாடுகளுடனும் உள்ள இலங்கையின் வர்த்தகத்திலும் பார்க்கக் கூடிய அளவான பங்கை (ஏற்றுமதிகளில் 55.2 சதவீதத்தையும், இறக்குமதிகளில் 56.1 சதவீதத்தையும்) பெற்றது. இப்பிரதேசத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் பெறுமானம் (9572 இலட்சம் ரூபா) கிட்டத்தட்ட மாற்றமின்றி 1960ம் ஆண்டுக்குரிய (9570 இலட்சம் ரூபா) மட்டத்திலேயே இருந்தது. ஆனால் இறக்குமதிகளின் பெறுமானம் 1960ம் ஆண்டில் அடைந்த ரூபா 10538 இலட்சத்திலிருந்து 1961ம் ஆண்டு

ரூபா 9558 இலட்சத்திற்கு வீழ்ச்சியுற்றது. இதன் விளைவாக வர்த்தக நிலுவை சிறிது (ரூபா 14 இலட்சம்) சாதகமாயிற்று. ஸ்டேர்லின் பிரதேசத்திலிருந்து வந்த இறக்குமதிகளின் பெறுமானத்திற் காணப்பட்ட வீழ்ச்சி, பர்மாவிலிருந்து கூடுதலான அரிசி இறக்குமதி செய்யப்பட்ட பொழுதிலுங் கூட ஏற்பட்டது. பர்மாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் பெறுமானம் 1960ம் ஆண்டில் இருந்த ரூபா 1220 இலட்சத்திலிருந்து 1961ம் ஆண்டு ரூபா 1850 இலட்சத்திற்கு அதிகரித்தது. எனினும், இவ்வதிகரிப்பை ஈடுசெய்வதற்கும் மேலதிகமான அளவில் ஏனைய ஸ்டேர்லிங் பிரதேச நாடுகளிலிருந்து வந்த இறக்குமதிகளின் பெறுமானம் வீழ்ச்சியடைந்தது. பிரிட்டனிலிருந்து வந்த இறக்குமதிகளின் 1960 ஆண்டுக்குரிய ரூபா 4330 இலட்சத்திலிருந்து 1961ம் ஆண்டு ரூபா 3620 இலட்சத்திற்குக் குறைந்தது. இந்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பிரதான பொருட்களுள், வாகனங்கள் ரூபா 350 இலட்சத்தாலும், உரம் ரூபா 60 இலட்சத்தாலும் குறைந்தன. இந்தியாவிலிருந்து வந்த இறக்குமதிகள் 1960ம் ஆண்டுக்குரிய ரூபா 2680 இலட்சத்திலிருந்து 1961ம் ஆண்டில் ரூபா 2060 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இந்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கருவாடு ரூபா 310 இலட்சத்தாலும், சற்கரை ரூபா 130 இலட்சத்தாலும் குறைவுற்றன.

டோலர் பிரதேசத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் பெறுமானம் ரூபா 100 இலட்சத்தால் வீழ்ச்சியுற்று ரூபா 2477 இலட்சமாகவும், இறக்குமதிகளின் பெறுமானம் ரூபா 143 இலட்சத்தால் அதிகரித்து ரூபா 1101 இலட்சமாகவும் விளங்கிற்று. எனவே, இப்பிரதேசத்துடனிருந்த சாதகமான வர்த்தக நிலுவை குறைவுற்று 1960ம் ஆண்டுக்குரிய ரூபா 1617 இலட்சத்திலிருந்து, 1961ம் ஆண்டு ரூபா 1376 இலட்சத்திற்கு வீழ்ச்சியுற்றது.

ஐரோப்பிய பொருளாதார சமுதாயத்தைச் சேர்ந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் பெறுமானம், அண்மையிலுள்ள கடந்த சில ஆண்டுகளாக உயர்ந்த மட்டத்தையும், உயர்ச்சிப் போக்கையும் (1957ம் ஆண்டு ரூபா 1162 இலட்சம், 1959ம் ஆண்டு ரூபா 2042 இலட்சம்) காட்டியிருக்கையில், 1961ம் ஆண்டில் அவை ரூபா 1470 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன. ஏற்றுமதிகளில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சி, ஜெர்மனியினுற் கொள்வனவு செய்யப்பட்ட இரப்பர், தேங்காய்த் துருவல் ஆகியவை 1960ம் ஆண்டுக்குரிய ரூபா 360 இலட்சத்திலிருந்து 1961 ஆண்டில் ரூபா 210 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தமையாலும், இத்தாலிக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேங்காயெண்ணெய் 1960ம் ஆண்டிற்குரிய ரூபா 220 இலட்சத்திலிருந்து 1961ம் ஆண்டில் ரூபா 120 இலட்சத்திற்குக் குறைந்தமையாலும் ஏற்பட்டது. இப்பிரதேசத்திலிருந்து வந்த இறக்குமதிகளின் பெறுமானமும் 1960ம் ஆண்டில் உள்ள ரூபா 1972 இலட்சத்திலிருந்து 1961ம் ஆண்டில் ரூபா 1790 இலட்சத்திற்கு ஒடுங்கியது. ஜெர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார்க் கார்களின் பெறுமானத்தில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டது (1960ம் ஆண்டில் ரூபா 80 இலட்சம், 1961ம் ஆண்டில் ரூபா 20 இலட்சம்).

**அட்டவணை II–21**

**சீனுவுடன் இலங்கை நடாத்திய வர்த்தகம்**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| வருடம் | ஏற்றுமதிகள் | | இறக்குமதிகள் | | வர்த்தக நிலுவை (பத்து இலட்சம் ரூபா) |
|---|---|---|---|---|---|
| | பெறுமானம் (பத்து இலட்சம் ரூபா) | மொத்த உள்நாட்டு ஏற்றுமதிகளின் சதவீதமாக | பெறுமானம் (பத்து இலட்சம் ரூபா) | மொத்த இறக்குமதிகளின் சதவீதமாக | |
| 1956 .. .. .. | 182 | 11·0 | 134 | 8·2 | +48 |
| 1957 .. .. .. | 167 | 10·5 | 84 | 4·6 | +83 |
| 1958 .. .. .. | 78 | 4·7 | 152 | 8·8 | —74 |
| 1959 .. .. .. | 78 | 4·6 | 150 | 7·5 | —72 |
| 1960 .. .. .. | 121 | 6·6 | 132 | 6·8 | —12 |
| 1961 .. .. .. | 83 | 4·9 | 35 | 2·0 | +48 |

மூலம்: இலங்கைச் சுங்கப் புள்ளிவிபரங்கள்

சீனுவுக்கும் இலங்கைக்கும் இடையே உள்ள வர்த்தகம், 1957ம் ஆண்டில் அந் நாட்டுடன் செய்துகொண்ட ஒரு வர்த்தக—சென்மதி உடன்படிக்கையின்கீழ் நடைபெற்று வருகிறது. இரண்டு நாடுகளுக்குமிடையே உள்ள பண்டமாற்றுச் சம்பந்தமான தாயேடும், ஒப்பந்தமும், 1961ம் ஆண்டில் இலங்கை 31,000 மெட்றிக் தொன்கள் கொண்ட இரப்பரை விற்பனை செய்வதற்கும், 200,000 தொன்கள் கொண்ட அரிசியைக் கொள்வனவு செய்வதற்கும் வழிவகுத்துள்ளன. இந்தத் தாயேடு 1961ம் ஆண்டில் மேலும் ரூபா 1000 இலட்சம் பெறுமானமுள்ள பொருட்களைச் சீனு ஏற்றுமதி செய்யவும், அதே அளவான பெறுமானமுள்ள பொருட்களை இலங்கை ஏற்றுமதி செய்யவும் உத்தேசித்துள்ளது.

சீனுவுடன் இலங்கை நடத்திய வர்த்தகம் சம்பந்தமாக, இலங்கைச் சுங்கப் புள்ளி விபரங்களின் மூலமாகக் கிடைத்த, முழுமையான விபரங்களை அட்டவணை II—21ல் காட்டுகிறது. ஏற்றுமதிகளின் பெறுமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி, இரப்பர் ஏற்றுமதிகள் 1960ம் ஆண்டிற்குரிய ரூபா 1210 இலட்சத்திலிருந்து 1961ம் ஆண்டில் ரூபா 600 இலட்சத்திற்குக் குறைந்தமையால் ஏற்பட்டது. இறக்குமதிகளின் பெறுமானத்தில் ஏற்பட்ட கூர்மையான வீழ்ச்சி அந்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் பெறுமானம் 1960ம் ஆண்டிற்குரிய ரூபா 1100 இலட்சத்திலிருந்து 1961ம் ஆண்டில் ரூபா 120 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தமையால் உண்டானது. இறக்குமதி செய்யப்பட்ட ஆடைவகைகளின் பெறுமானத்தில் (ரூபா 120 இலட்சம்) எவ்வித மாற்றமும் காணப்படவில்லை.

ருசியாவுடனும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனும் இலங்கை செய்த வர்த்தக—சென்மதி உடன்படிக்கைகள் இந்த ஆண்டிலும் தொடர்ந்து இயங்கின. அண்மையிலுள்ள கடந்த சில ஆண்டுகள் அனைத்திலும் இத்தொகுதியைச் சேர்ந்த நாடுகளுடன் தொடர்ச்சியாக உயர்ந்துகொண்டுவந்த வர்த்தகம், 1961ம் ஆண்டு மேலும் அதிகரித்தது. இந்நாடுகளுக்கு 1961ம் ஆண்டு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் பெறுமானம் ரூபா 728 இலட்சமாகும் (1960ம் ஆண்டில் ரூபா 556 இலட்சம்). இது உள்நாட்டுப் பொருட்களின் மொத்த ஏற்றுமதிப் பெறுமானத்தில் 4.5 சதவீதமாக உள்ளது.

**அட்டவணை II—22**

ருசியாவுடனும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனும் இலங்கை நடாத்திய வர்த்தகம்

| வருடம் | ஏற்றுமதிகள் | | இறக்குமதிகள் | | வர்த்தக நிலுவை (பத்து இலட்சம் ரூபா) |
|---|---|---|---|---|---|
| | பெறுமானம் (பத்து இலட்சம் ரூபா) | மொத்த உள் நாட்டு ஏற்றுமதிகளின் சதவீதமாக | பெறுமானம் (பத்து இலட்சம் ரூபா) | மொத்த இறக்குமதிகளின் சதவீதமாக | |
| 1956 .. .. .. | 1·3 | 0·08 | 7·6 | 0·47 | — 6·3 |
| 1957 .. .. .. | 6·5 | 0·41 | 9·9 | 0·55 | — 3·4 |
| 1958 .. .. .. | 24·7 | 1·49 | 8·7 | 0·51 | +16·0 |
| 1959 .. .. .. | 27·3 | 1·56 | 23·4 | 1·16 | + 3·9 |
| 1960 .. .. .. | 55·6 | 3·04 | 21·4 | 1·09 | +34·2 |
| 1961 .. .. .. | 72·8 | 4·52 | 47·3 | 2·78 | +25·5 |

மூலம்: இலங்கைச் சுங்கப் புள்ளிவிபரங்கள்

1960ம் ஆண்டில் இந்நாடுகளின் கொள்வனவுகள் பெரும்பாலும் இரப்பராகவே இருந்தது. அவ்வாண்டில் இந்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட சகல பொருட்களினதும் மொத்தப் பெறுமானமாகிய ரூபா 556 இலட்சத்தில், இரப்பரின் பெறுமானம் ரூபா 478 இலட்சமாக விளங்கியது. 1961ம் ஆண்டில் அவை கொள்வனவு செய்த இரப்பரின் பெறுமானம் ரூபா 592 இலட்சத்திற்கும், தேங்காய் எண்ணெயின் பெறுமானம் ரூபா 79 இலட்சத்திற்கும் அதிகரித்தன. கொள்வனவுகளிற் பெரும் பகுதியானவைக்கு ருசியாவும் (ரூபா 451 இலட்சம்), போலாந்தும் (ரூபா 221 இலட்சம்) முக்கிய நாடுகளாக விளங்கின. ரூமேனியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் பெறுமானம் (ரூபா 52 இலட்சம்), முந்தைய ஆண்டிற்குரிய தொகையிலும் பார்க்கக் குறைந்தது. ஏனைய நாடுகளுக்குச் செய்யப்பட்ட ஏற்றுமதிகள் மிகச் சிறிதளவானவையாகும்.

இந்த நாடுகளிலிருந்து வந்த இறக்குமதிகளின் பெறுமானம் 1960ம் ஆண்டில் சிறிது குறைவுற்றுப் பின் 1961ம் ஆண்டில் அது இரண்டு மடங்கிலும் மேலான அளவிற்கு (ரூபா 473 இலட்சத்திற்கு) அதிகரித்தது. இப்பெறுமானம் மொத்த இறக்குமதிகளின் பெறுமானத்தில் 3 சதவீதமானதாக உள்ளது. போலாந்திலிருந்து வந்த இறக்குமதிகளின் பெறுமானம் (1960ம் ஆண்டில் ரூபா 5 இலட்சம், 1961ம் ஆண்டில் ரூபா 242 இலட்சம்) குறிப்பிடும்படியாக உயர்ந்தது. இது ஏராளமான (ரூபா 172 இலட்சம் பெறுமானமுள்ள) சீனி கொள்வனவு செய்யப்பட்டமையால் ஏற்பட்டதாகும்.

வர்த்தக ஒப்பந்தங்கள்

1961ம் ஆண்டில் கீழ்க்காணும் வர்த்தக, கொடுப்பனவு ஒப்பந்தங்கள் முடிவு செய்யப்பட்டன. 1961 மாசி 20ல் ஈராக்கு தேசத்துடன் செய்யப்பட்ட வர்த்தக உடன்படிக்கை ஒரு வருடத்துக்குச் செல்லுபடியாகவும், அத்துடன் தன்னியக்கமாக காலத்தை நீடிப்பதற்கான ஏற்பாட்டையும் கொண்டிருந்தது. இது உத்தரவளிக்கின்ற வகையைக்கொண்டதாகவும், இரு தேசங்களுக்குமிடையே பரிமாற்றப்பட வேண்டிய பண்டங்களின் பட்டியல்களைக் கொண்டதாகவும் உள்ளது. இதைத் தொடர்ந்து பரிமாறப்பட்ட கடிதங்களின் நிபந்தனைகளின்படி, ஈராக்கிடமிருந்து குறைந்த பட்சத் தொகை 8,000 தசாமிச தொன் பேரீச்சம் பழங்களை வருடாந்தம் இறக்குமதிசெய்ய இலங்கை கட்டுப்பட்டிருக்கின்றது.

இரு தேசங்களுக்குமிடையே உள்ள வர்த்தக உறவுகள் பரஸ்பரமான நேச நாட்டு வசதிகளடிப்படையில் அபிவிருத்தியடையும் நிபந்தனைகளுடன், 1961 சித்திரை 22ல் ஜெர்மன் குடியாட்சிக் குடியரசுடன் (கிழக்கு ஜெர்மனி) கடிதங்கள் பரிமாறப்பட்டன. இவ்வசதிகள் ஆரம்பத்தில் ஒரு வருடத்திற்குச் செல்லுபடியாகும். ஆனாலும் இதில் தன்னியக்கமாகக் காலத்தை நீடிப்பதற்கும் இடமளிக்கப்பட்டுள்ளது.

1961, வைகாசி 15ல் புல்கேரியாவுடன் ஓர் வர்த்தகக் கொடுப்பனவு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இது உத்தரவளிக்கின்ற வகையைக் கொண்டதாகவும் உள்ளது. கொடுப்பனவு ஒப்பந்தம் 40,000 பவுண் பரஸ்பரமான சுழற் கடனுக்கு இடமளிக்கின்றது. இரு ஒப்பந்தங்களும் ஆரம்பத்தில் ஒரு வருடத்திற்குச் செல்லுபடியாகவும், அத்துடன் தன்னியக்கமாக நீடித்து இயங்கும் ஏற்பாட்டையும் கொண்டுள்ளன.

1956ம் ஆண்டு ஆனி 4ம் திகதி ஹங்கேரியுடன் செய்துகொண்ட வர்த்தக ஒப்பந்தத்திற்கு ஒரு தாயேடும், அத்தேசத்துடன் ஓர் புதிய கொடுப்பனவு ஒப்பந்தமும், 1961 புரட்டாதி 12ல் முடிவு செய்யப்பட்டது. தாயேட்டிலுள்ள ஏனைய விடயங்களுள், இரு தேசங்களுக்குமிடையே உள்ள மூல வர்த்தக, பொருளாதார தொழில் நுட்ப உதவி ஒப்பந்தத்திலுள்ள நேசநாட்டு வசதிகள் விதியை விரிவாக விளக்க இடமளிக்கப்பட்டுள்ளது. இக்கொடுப்பனவு ஒப்பந்தம் 40,000 பவுண் பரஸ்பரமான சுழற் கடனுக்கும் வசதியளிக்கின்றது. ஆரம்பத்தில் இவ்விரு ஒப்பந்தங்களும் ஒரு வருடத்திற்குச் செல்லுபடியாகவும் அத்துடன் தன்னியக்கமாக நீடித்து இயங்கும் ஏற்பாட்டை உடையனவாகவும் விளங்குகின்றன.

1961 மார்கழி 6ல் இந்தியாவுடன் ஓர் வர்த்தக ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. இரு தேசங்களுக்கிடையே வியாபாரத்தை இலகுவாக்குவதுடன், விசேடமாக கொப்பரு, தேங்காய் எண்ணெய், இரப்பர், யாழ்ப்பாணப் புகையிலை ஆதியனவற்றை இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்வதும், கருவாடு, தயாரிக்கப்பட்ட பீடிகள், பிரம்பு, சர்க்கரை, புளி முதலியனவற்றை இந்தியாவிலிருந்து இலங்கைக்கு ஏற்றுமதி செய்வதுமே இவ்வொப்பந்தத்தின் நோக்கமாகும். இரு தேசங்களும் நிகழும் 12 மாத காலத்துக்குள் சம்பந்தப்பட்ட பண்டங்களில் திட்டமான தொகைகளை இறக்குமதி செய்ய நடவடிக்கைகள் எடுக்கும்.